

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு ஆகியோர் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் திட்ட நிதியிலிருந்து மாதவரம் சரக்குந்து முனையத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூ.30.30 கோடி நிதி, பெருநகர சென்னை மாநகராட்சி இயந்திரப் பொறியியல் துறையின் மூலம் 51 ஸ்கிட் ஸ்டீர் லோடர்கள் (51 Skid Steer Loaders) கொள்முதல் செய்வதற்காக ரூ.12.75 கோடி நிதி என மொத்தம் ரூ.43.05 கோடி நிதிக்கான காசோலைகளை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு நேற்று (19.10.2023) ரிப்பன் கட்டட அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினர். இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சுதர்சனம், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை செயலாளர் சி.சமயமூர்த்தி, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா மற்றும் மாநகராட்சி உயர் அலுவலர்கள், சி.எம்.டி.ஏ. அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத் திட்ட நிதியிலிருந்து

# ரூ.43.05 கோடி பெருநகர சென்னை மாநகராட்சிக்கு நிதி!

## அமைச்சர்கள் கே.என்.நேரு - பி.கே.சேகர்பாபு வழங்கினர்!

சென்னை, அக்.20-

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி நேற்று (19.10.2023) பெருநகர சென்னை மாநகராட்சி, ரிப்பன் கட்டட அலுவலகக் கூட்டரங்கில், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு ஆகியோர் தலைமையில் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் திட்ட நிதியிலிருந்து மாதவரம் சரக்குந்து முனையத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூ.30.30 கோடி நிதி, பெருநகர சென்னை மாநகராட்சியின் இயந்திரப் பொறியியல் துறையின் மூலம் 51 ஸ்கிட் ஸ்டீர் லோடர்கள் (51 Skid Steer Loaders) கொள்முதல் செய்வதற்காக ரூ.12.75 கோடி நிதி என மொத்தம் ரூ.43.05 கோடி நிதி பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வழங்கப்பட்டது.

இதில் அமைச்சர் கே.என்.நேரு செய்தியாளர் சந்திப்பில் பேசியதாவது:

முதலமைச்சர் உத்தரவின்படி, மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் சட்டமன்றத்தில் இலாக்காக்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டால், எந்தப் பணியினை முதலில் செய்ய வேண்டும் என்றும், அதற்கான திட்ட அறிக்கை மற்றும் தொகையை முடிவு செய்து, பணியினை உடனடியாக தொடங்கிட வேண்டும் என்பதன் அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

முதலமைச்சர் அவர்கள் பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சி பகுதிகளில் என்னென்ன பணிகளை முதலில் மேற்கொள்ள வேண்டும் என்று முடிவு செய்து, அதற்கான விரிவான திட்ட அறிக்கையினை தயார் செய்து வைத்துக் கொள்ள வேண்டும் எனவும், நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டவுடன், முடிவு செய்யப்பட்ட பணிகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் எனவும், மழை பெய்வதற்கு முன்பதாக அனைத்து பணிகளையும் தொடங்கப்பட வேண்டும் என உத்தரவிட்டிருந்தார்கள்.

அதனடிப்படையில், அனைத்துப் பகுதிகளுக்கும் இந்த வருடம் ஒதுக்கப்பட்ட தொகையில் 5 சதவீதம் தவிர, மற்ற அனைத்துப் பணிகளையும் மேற்கொள்ள நகராட்சி, பேரூராட்சி மற்றும் மாநகராட்சிகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டு அனைத்து பணிகளும் நடைபெற்று வருகிறது.

தமிழ்நாட்டில் உள்ள நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் அனைத்து சாலைகளும் முழுமையாக போடப்பட்டுள்ளது. மழைக்காலங்களை எதிர்கொள்ளும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, கால்வாய்கள் மற்றும் நீர்நிலைகளை சுத்தம் செய்யும் பணிகள் மாவட்டங்கள் தோறும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சென்னையைப் பொறுத்தவரை, சாலைப் பணிகள் உள்ளிட்ட பணிகளுக்காக கிட்டத்தட்ட ரூ.2000 கோடியினை முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கீடு செய்தார்கள். இவற்றில் முதற்கட்டமாக 5000 சாலைப்பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது.

மேலும், மழைக்காலங்களில் பொதுமக்களை தங்கவைப்பதற்கான நிவாரண மையங்கள் மற்றும் மையங்களில் தங்குபவர்களுக்கு தேவையான உணவு மற்றும் அடிப்படை வசதிகள் ஆகியவை தயார் நிலையில் உள்ளன. மழையின் காரணமாக விழும் மரங்கள் மற்றும் மரக்கிளைகளை அகற்றும் வகையில் மர அறுவை இயந்திரங்கள், மழைநீர் தேங்கினால் அவற்றை அகற்றும் வகையில் 700க்கும் மேற்பட்ட மோட்டார் பம்புகள் ஆகியவை தயார் நிலையில் உள்ளன. மேலும், நீர்நிலைகளில் உள்ள ஆகாயத் தாமரைகள் மற்றும் வண்டல்கள் அகற்றப்பட்டு மழைநீர் எளிதில் செல்லும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. வடகிழக்குப் பருவமழையை எதிர்கொள்ளும் வகையிலும், பொதுமக்களும் எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையிலும் அனைத்து நடவடிக்கைகளும் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேச்சு!**

இதில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் மாதவரம் பேருந்து நிலையம் மற்றும் மாதவரம் சரக்குந்து முனையத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக நீண்ட நாட்களாக இருந்த கோரிக்கையை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றவுடன் உடனடியாக பெருநகர சென்னை மாநகராட்சியின் வளர்ச்சிக்கு அந்த நிதியை ஒதுக்கிடுமாறு உத்தரவிட்டதின்பேரில் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் திட்ட நிதியிலிருந்து மாதவரம் பேருந்து நிலையம் மற்றும் மாதவரம் சரக்குந்து முனையத்திற்கு ரூ.30.30 கோடிக்கான காசோலையும் மற்றும் அதேபோல் சென்னையில் சிறுசிறு தெருக்களில் இருக்கின்ற குப்பைகள் மற்றும் கழிவுகளை அகற்றுவதற்கு மிகுந்த பயனுள்ள இயந்திரமான பாப்கேட் என்று சொல்லக்கூடிய இயந்திரத்தை வாங்குவதற்காக ரூ.12.75 கோடி மதிப்பீட்டில் 51 பாப்கேட் ஸ்கிட் ஸ்டீர் லோடர்கள் (51 Bobcat Skid Steer Loaders) சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் திட்ட நிதியிலிருந்து மொத்தம் ரூ.43.05 கோடிக்கான காசோலைகள் இன்று பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வழங்கப்பட்டது.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு கூறினார்.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ். சுதர்சனம், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை செயலாளர் சி.சமயமூர்த்தி, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா, கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) சங்கர்லால் குமாவத், கூடுதல் ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) திருமதி ஆர்.லலிதா, இணை ஆணையாளர் (பணிகள்) டாக்டர் ஜி. எஸ். சமீரன், துணை ஆணையாளர் (கல்வி) திருமதி ஷரண்யா அறி, மற்றும் சி.எம்.டி.ஏ அலுவலர்கள் கலந்து கொண்டனர்.


**தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்**

**E-டெண்டர் மூலம் ஒப்பந்தப்புள்ளி அழைப்பதற்கான அறிவிப்பு**

**தேசிய அளவிலான போட்டி ஒப்பந்தபுள்ளி**

கலைஞர் 100 1924 - 2023

தே.அ. ஒ. அ. எண். 27/ கோ. அருப்புக்கோட்டை பா..சா.தி / க.சே.அ/ KFW/வஅ 2 / 2023/ நாள். 16 10. 2023 ( E-டெண்டர்)

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் நடைமுறையின் படி தகுதியுள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து (முதல் வகுப்பு ஒப்பந்தக்காரர்கள் (சிவில்)) தமிழ்நாடு டெண்டர்களில் வெளிப்படைத்தன்மை சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000க்கு இணங்க – (இரண்டு உறை) – இனம் வாரியாக கீழ் பின்வரும் பணிகளுக்கு E-டெண்டர் அழைக்கப்படுகின்றன.

| வ எண். | திட்டத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த அழைப்பு எண். | பணியின் உத்தேச மதிப்பு (ச.ம.சே.வரி உட்பட) | முன்வைப்பு தொகை | ஒப்பந்தப் புள்ளி முன் ஆய்வுக் கூட்டம் | ஒப்பந்தப் புள்ளி சமர்ப்பித்தல் | ஒப்பந்தப் புள்ளி திறப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1. | விருதுநகர் மாவட்டத்திலுள்ள அருப்புக்கோட்டை நகராட்சிக்கு பாதாள சாக்கடை திட்டம் அமைத்தல் – கழிவு நீர் சேகரிக்கும் அமைப்பு மற்றும் அதன் தொடர்புடைய பணிகள் பாதாள சாக்கடை அமைக்கும் பணிகள் (திட்டப் பணிகள் முடிக்க வேண்டிய காலம் 36 மாதங்கள், சோதனை ஓட்டம் 6 மாதங்கள் மற்றும் பராமரிப்பு பணிகள் 60 மாதங்கள் (5 வருடங்கள்) | ரூ.192.00 கோடி | ரூ. 192.00 இலட்சம் | 16.11.2023 அன்று முற்பகல் 11.00 மணி | 11.12.2023 அன்று பிற்பகல் 03.00 மணிக்குள் | 12.12.2023 அன்று பிற்பகல் 03.30 மணிக்கு |

நிதி : SBM 2.0, KFW மற்றும் CGF

ஒப்பந்தபுள்ளி முன் வைப்புத்தொகை மின்னணு பரிவர்த்தனை முறையில் செலுத்த வேண்டும். மின்னணு பரிவர்த்தனை அறிக்கையின் நகலை தொழில் நுட்ப ஒப்பந்த புள்ளியில் சேர்த்து ஒப்பந்தக்காரர் சமர்ப்பிக்க வேண்டும்

ஒப்பந்தபுள்ளி ஆவணங்கள் மற்றும் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் ஆகியவை இணையதளம் "https://tntenders.gov.in" மூலமாக. மற்ற அனைத்து விவரங்களுக்கும் இணையதளத்தில் 27.10.2023 முதல் பார்வையிடலாம்.

செ.ம.தொ.இ/ 5691 /ஒப்பந்தப்புள்ளி/2023

தேவை இத்தருணம் – குடிநீர் சிக்கனம்

தலைமைப் பொறியாளர் (பொ), த.கு.வ.வாரியம், மதுரை.





தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் நேற்று (19.10.2023) சென்னை, மாநில செய்தி நிலையக் கூட்டரங்கில், ஆறு மண்டல இணை இயக்குநர்களின் பணி ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் மரு. இரா. செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன் மற்றும் செய்தித்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அரசு மரியாதையுடன் இறுதி நிகழ்வுகள்! – மறைந்த

# பங்காரு அடிகளாரின் ஆன்மிகப் புரட்சி போற்றத்தக்கது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தி!

**சென்னை, அக்.20–**

**பங்காரு அடிகளாரின் ஆன்மிகப் புரட்சி போற்றத்தக்கது என்று அவரது மறைவையொட்டி வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பங்காரு அடிகளாரின் இறுதி நிகழ்வுகள் அரசு மரியாதையுடன் நடைபெறும் என்று அறிவித்துள்ளார்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி பீடத்தின் நிறுவனர் பங்காரு அடிகளார் அவர்கள் மறைவெய்தினார் என்ற செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

ஆதிபராசக்தி பீடத்தை நிறுவி, அரை நூற்றாண்டிற்கும் மேலாக மிகச்சிறப்பாக நடத்தி, கல்வி, மருத்துவம் உள்ளிட்ட பல்வேறு சமூக சேவைகளையும் மக்களுக்கு வழங்கி வந்தார்.

அம்மா என்று பக்தர்களால் அழைக்கப்பட்ட பங்காரு அடிகளார் அவர்கள், மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி ஆலயத்தில் பெண்களே கருவறைக்குள் சென்று வழிபாடுகள் நடத்தும் புரட்சிகரமான நடைமுறைகளை வழக்கப்படுத்தினார்.

கோயில் கருவறைக்குள் அனைத்துச் சாதியினரும் சென்று அர்ச்சனை செய்ய வேண்டும் என்பதற்காக தி.மு.கழகம் பல ஆண்டுகளாகப் போராடி, அதனை நடைமுறைப்படுத்தியும் வரும் நிலையில், அனைத்துப் பெண்களையும் கருவறைக்குள் சென்று அவர்களே பூசை செய்து வழிபடச் செய்த பங்காரு அடிகளார் அவர்களின் ஆன்மிகப் புரட்சி, மிகவும் மதித்துப் போற்றத்தக்கது.

அவரது ஆன்மிக மற்றும் சமூக சேவைகளைப் பாராட்டி கடந்த 2019-ஆம் ஆண்டு ஒன்றிய அரசு பத்மஸ்ரீ விருது வழங்கிப் பெருமைப்படுத்தியது.

கடந்த 2021-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் “நம்மைக் காக்கும் 48” திட்டத்தைத் தொடங்கி வைப்பதற்காக மேல்மருவத்தூர் சென்றிருந்த போது, உடல்நலிவுற்றிருந்த பங்காரு அடிகளார் அவர்களை நேரில் சென்று பார்த்து நலம் விசாரித்து வந்தேன்.

உடல்நலக்குறைவால் சிகிச்சை பெற்று வந்த அடிகளார் அவர்கள் தற்போது மறைவுற்றிருப்பது, அவரது பக்தர்களுக்கு ஒரு பேரிழப்பாகும். பங்காரு அடிகளாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினர், பக்தர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பங்காரு அடிகளார் அவர்களின் சேவைகளைப் போற்றும் வகையில், அரசு மரியாதையுடன் அவரது இறுதி நிகழ்வு நடைபெறும்.

இவ்வாறு தமது இரங்கல் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில்,

# உலக விபத்து மற்றும் மார்பக புற்றுநோய் தினம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்!

சென்னை, அக்.20-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சென்னை, அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், உலக விபத்து தினத்தை முன்னிட்டு, முதலுதவி செயல்முறை விளக்கத்தினை பார்வையிட்டு, விபத்து மற்றும் முதலுதவி கையேட்டினை வெளியிட்டு, மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு மாதத்தை முன்னிட்டு, புற்றுநோய் விழிப்புணர்வு தொடர்பாக மருத்துவமனையின் சார்பில் மேற்கொள்ளப்படும் செயல்முறைகள் குறித்து கேட்டறிந்தார்.

இராஜஸ்தான் இளைஞர் அமைப்பின் சார்பில், “திருப்தி” எனும்திட்டத்தின் கீழ், உள்நோயாளிகளின் உடனிருப்போருக்கு மதிய உணவு வழங்கும் நிகழ்வினை தொடங்கி வைத்து, முதலாம் ஆண்டு மருத்துவ மாணவர்கள் வெள்ளை அங்கி அணிவிக்கும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்.

தொடர்ந்து செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது:-

உலக விபத்து தினத்தினை முன்னிட்டு மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு மாதம் அனுசரிக்கும் விதமாக கையேடு வெளியிடப்பட்டிருக்கிறது. அந்த கையேட்டில் விபத்துகள் ஏற்பட்டவுடன் செய்யப்படும் முதலுதவிகள் குறித்து விளக்கங்கள் இடம் பெற்றுள்ளது. மேலும், சென்னை சட்டக்கல்லூரி NSS மாணவர்களுக்கு முதலுதவி பயிற்சிகள் வழங்கப்படுகிறது. மேலும், உலக விபத்து தினத்தின் கருப்பொருளாக குரல்களுக்கு அதிகாரமளித்தல், காயங்களை குணப்படுத்துதல் இந்த ஆண்டு முதல் கடைப்பிடிக்கப்படுகிறது.

**மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு மாதம்**

மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு மாதம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அந்தவகையில் 40 வயதிற்கு மேற்பட்ட பெண்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவமனை ஊழியர்களுக்கு மார்பக புற்றுநோய் கண்டறிதல் முகாம் 11.10.2023 முதல் 31.10.2023 வரை நடத்தப்படுகிறது. இதில் சிறப்பு மெமோகிராம் பரிசோதனை மற்றும் விழிப்புணர்வு அடங்கிய தகவல் விவரங்கள் ஒவ்வொருவருக்கும் வழங்கப்படவிருக்கிறது. இராஜஸ்தான் இளைஞர் அமைப்பினர் “திருப்தி” என்கின்ற திட்டத்தினை தொடங்கி வைத்திருக்கிறார்கள். சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையைப் பொறுத்தவரை தினந்தோறும் வருகை தரும் புறநோயாளிகள் 8,000 பேர் வரை நாளொன்றுக்கு பயன்பெறுகிறார்கள். சுமார் 2,000 பேர் உள்நோயாளிகளும் பயன்பெற்று வருகிறார்கள். உள்நோயாளிகளுக்கு அரசின் சார்பில் உணவு வழங்கப்படுகிறது என்றாலும் அவர்களுடன் வருகின்றவர்களுக்கு உணவு என்பது கேள்விக்குறியான ஒன்றுதான். நமது இராஜஸ்தான் இளைஞர் அமைப்பினர் இன்று அந்த திட்டத்தினை இம்மருத்துவமனையில் தொடங்கி இருக்கிறார்கள்.

**டெங்கு பாதிப்பு விவரம்**

தமிழ்நாட்டினைப் பொறுத்தவரை இதுவரை கடந்த ஜனவரி முதல் தற்போது வரை ஏற்பட்டிருக்கின்ற டெங்கு பாதிப்பு 5,356 ஆகும். இன்றைக்கு சிகிச்சையில் இருப்பவர்கள் 531 பேர், நேற்றைக்கான பாதிப்பு 43 பேர், இதுவரை டெங்குவினால் பாதிப்புக்கு உள்ளாகி மரணமடைந்தவர்கள் எண்ணிக்கை 5 என்ற அளவில் உள்ளது. வருகின்ற நவம்பர், டிசம்பர் மாதங்களில் சுமார் 1,000 முதல் 1,500 வரை பாதிப்புகள் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. காரணம் வடகிழக்கு பருவமழை ஆரம்பிக்கப்பட உள்ளது. மேலும் கடந்த சில மாதங்களாக வெப்பச்சலன மழை, கோடை மழை தொடர்ந்து கொண்டே இருக்கும் காரணத்தினால் நீர்த்தேக்கம் என்பது ஆங்காங்கே இருந்துக் கொண்டிருக்கிறது. இதனால் இந்த கொசு உற்பத்தி இருக்கிறது என்றாலும் அரசின் சார்பில் கொசுக்களை ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. அதனால் டெங்கு பாதிப்பு என்பது கட்டுக்குள் இருக்கிறது.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பையடுத்து

# நாவலூர் சுங்கச் சாவடியில் கட்டண வசூல் நிறுத்தம்!

## நேற்று முதல் அமலுக்கு வந்தது! வாகன ஓட்டிகள் மகிழ்ச்சி!

சென்னை, அக். 20-

நாவலூர் சுங்கச்சாவடியில் நேற்று காலை முதல் கட்டண வசூல் நிறுத்தப்பட்டது. இதையடுத்து வாகனங்கள் கட்டணம் செலுத்தாமல் சென்று வருகின்றன. சாலையில் போக்குவரத்து நெரிசலின்றி செல்ல முடிவதாக வாகன ஓட்டிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். சுங்கக் கட்டண வசூலை நிறுத்திய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பொதுமக்கள் நன்றி தெரிவித்தனர்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவிப்பை அடுத்து நாவலூர் சுங்கச்சாவடியில் கட்டணமின்றி வாகனங்கள் சென்று வருகின்றன. பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று சுங்கக் கட்டணத்தை ரத்து செய்த முதலமைச்சருக்கு பொதுமக்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

‘கள ஆய்வில் முதலமைச்சர்’ திட்டத்தின் கீழ் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய 4 மாவட்ட ஆட்சியர்களுடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆலோசனை நடத்தினார். மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்து அவர் கேட்டறிந்தார்.

அப்போது பேசிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று சென்னை ராஜீவ் காந்தி சாலையில் சுங்கக் கட்டணம் வசூல் நிறுத்தப்படுவதாக அறிவித்தார். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பை தொடர்ந்து

### மதுரை வடக்கு – தெற்கு – மாநகர் – திண்டுக்கல் கிழக்கு – மேற்கு – தேனி வடக்கு – தெற்கு – சிவகங்கை – இராமநாதபுரம்

# மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கூட்டம்!

## அணிச் செயலாளர் – மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. அறிவிப்பு!

தி.மு.க. சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ, எம்.பி., தலைமையில், மதுரை வடக்கு, மதுரை தெற்கு, மதுரை மாநகர், திண்டுக்கல் கிழக்கு, திண்டுக்கல் மேற்கு, தேனி வடக்கு, தேனி தெற்கு, சிவகங்கை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களுக்குட்பட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் - தலைவர் - துணைத் தலைவர் ஆலோசனைக் கூட்டம், நாளை (21.10.2023-சனிக்கிழமை) காலை 9.00 மணியளவில் மதுரை, யா.ஒத்தக்கடை, எஸ். எஸ்.பேரடைஸ் அரங்கில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் மதுரை வடக்கு, மதுரை தெற்கு, மதுரை மாநகர், திண்டுக்கல் கிழக்கு, திண்டுக்கல் மேற்கு, தேனி வடக்கு, தேனி தெற்கு, சிவகங்கை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களுக்குட்பட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் - தலைவர் - துணைத் தலைவர் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்ட தலைவர், துணைத் தலைவர், துணை அமைப்பாளர்கள் ஆகியோர் இக்கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ள உரிய ஏற்பாடுகளை மாவட்ட அமைப்பாளர் செய்திடுவதோடு, அவர்கள் கூட்டத்தில் கலந்து கொள்வதை உறுதி செய்திட வேண்டும்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 18.10.2023

**என்.ஆர்.இளங்கோ எம்.பி.**
செயலாளர்,
தி.மு.க. சட்டத்துறை